கௌரவ. தினேஸ் குணவர்த்தன
திறன்கள் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர்
மேஹவர பியச
கொழும்பு 05

கௌரவ அமைச்சர் அவர்கட்கு,

**கோவிட்19 உலகம்பரவு நோய் இடர் நிலை மற்றும் சுமூக நிலைக்கு திரும்பும் செயற்பாட்டில் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் உறுதிப்படுத்தப்படுவதற்கான முன்மொழிவுகள்**

கோவிட்19 உலகம்பரவு நோய் இடர் நிலையினால் தொழில் வழங்குனர்கள் மீதும் தொழிலாளர்கள் மீதும் ஏற்படும் பாதிப்புகளை முகாமை செய்வதற்காக தொழிலாளர்களது பிரதிநிதித்துவத்துடன் அமைச்சு மட்டத்தில் பணிக்குழுவொன்றை அமைத்ததற்காக ஏற்றுமதி பதப்படுத்தல் வலய தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கள், அமைப்புக்கள் என்ற வகையில் முதலாவதாக நன்றியை கூறிக்கொள்கின்றோம்.

இந்த இடர் மற்றும் அதனால் ஏற்படப்போகும் பொருளாதார நெருக்கடியினால் எமது ஏற்றுமதி உற்பத்தித் துறை சவால் நிறைந்த சூழ்நிலையினை எதிர்கொள்ளும் என்பதை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றோம். அதனை எதிர்கொள்வதற்கு குறுகிய கால மற்றும் நீண்டகால திட்டங்கள் அவசியம் என்பதுடன் அவற்றை உருவாக்குவதிலும் அமுல்படுத்துவதிலும் இத்துறை சார்ந்த பிரதான பங்குதாரார் என்ற வகையில் தொழிலாளர்களது கருத்துக்களுக்கும் யோசனைகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும் என நாங்கள் நம்புகின்றோம்.

ஆடைத் தொழிற் துறை உட்பட்ட ஏற்றுமதி பதப்படுத்தல் கைத்தொழிற் தொழிலாளர்களினால் கடந்த சில தசாப்தங்களாக இலங்கையில் பொருளாதரத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு பாரிய அளவிலானது. எனவே இந்த கடினமான காலப்பகுதியில் அவர்களது உரிமைகளையும் நலன்களையும் உறுதிசெய்வது தொழில் வழங்குனர்களதும் அரசாங்கத்தினதும் பிரதான பொறுப்பாகும். அந்த நோக்கத்திற்காக கீழ்வரும் முன்மொழிவுகளை நாங்கள் முன்வைக்கின்றோம். இம் முன்மொழிவுகள் தொடர்பில் விரிவாக கலைந்துரையாடுவதற்கு தங்களால் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுமானால் நாங்கள் நன்றியுடையவர்களாவோம்.

தற்போது ஏற்றுமதி பதப்படுத்தல் வலயத்திலுள்ள பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு தொழிலாளர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஆனாலும் இன்னும் பாரிய எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் அவர்களது வீடுகளுக்கு திரும்பிச் செல்ல முடியாத நிலையில் வாடகை இருப்பிடங்களிலும் தற்காலிக வசிப்பிடங்களிலும் தங்கியுள்ளனர். இவ்வாறாந தொழிலாளர்களை சரியாக கணக்கிலெடுத்து அவர்களது அடிப்படை தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுங்கள். வறுமையான குடும்பங்களுக்கு வழங்கப்படும் 5,000 ரூபாய் கொடுப்பனவை இத் தொழிலாளர்களுக்கும் வழங்குவதற்கான (முக்கியமாக மனிதவலு முகவர்கள் மூலம் தற்காலிக தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு) நடவடிக்கையை எடுங்கள். கடந்த ஒரு மாதமாக சம்பளமின்றி எவ்வித உதவியிமின்றி தவிக்கவிடப்பட்ட தொழிலாளர்களது வசிப்பிட வாடகையை அரசாங்கம் தலையிட்டு செலுத்தவேண்டும்.

வைரஸ் பரவுகை குறைவடைவதற்கான எதுவித சான்றுகளும் தென்படாத நிலையில் தொழிலாளர்களது உயிர்களை முன்னிலைபடுத்துவதுடன் தொழிற்சாலைகளை மீளத் திறக்கும் முடிவினை மீள் பரிசீலனை செய்யுமாறும் கோருகின்றோம். ஏற்றுமதி பதப்படுத்தல் கைத்தொழில் தொழிற்சாலைகளை மீளத் திறக்க அரசாங்கம் முடிவெடுக்கும்போது அவ்வாறு மீளத் திறக்கப்படும் தொழிற்சாலைகளினதும் ஏற்கனவே தொழிற்பட்டுக்கொண்டிருக்கும் தொழிற்சாலைகளினதும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான சேவைச் சூழலை உறுதிப்படுத்தவேண்டும். வேலைத்தளத்தில் மட்டுமில்லாது வசிப்பிடம், போக்குவரத்து வாகனங்கள் மற்றும் பொதுச் சேவை வழங்குமிடங்களிலும் அரசாங்கத்தினாலும் உலக சுகாதார அமைப்பினாலும் பரிந்துரைக்கப்படும் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிசெய்வதற்கான பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.

கடந்த காலங்களில் தொழிலாளர்களால் வழங்கப்பட்ட சேவைக்கான சம்பளங்கள், மேலதிகநேரக் கொடுப்பனவுகள், பண்டிகைக் கொடுப்பனவுகள் ஆகியவற்றை வழங்காமல் விடுவதற்கான காரணமாக தற்போதைய நெருக்கடி இருக்கக்கூடாது. அவ்வாறான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை தொழில் வழங்குனர்கள் எடுப்பதை உறுதி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

தொழிலாளர்களது அடிப்படைத் தேவைகள், சுகாதாரம், பாதுகாப்பு தொடர்பான முறைப்பாடுகளை பெறுவதுடன் அவற்றிற்கு விரைவான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு அரச துறை, முதலீட்டுச் சபை மற்றும் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஒருங்கிணைக்கப்பட்ட இயங்குமுறையொன்றை கட்டமைக்கவேண்டும்.

தற்போதையை சூழ்நிலையில் தொழிலாளர்களை சேவையில் தொடர்ந்து பேணுவது கடினமானது என பல சந்தர்ப்பங்களில் ஏற்கனவே தொழில் வழங்குனர்கள் கூறியுள்ளனர். ஆடை ஏற்றுமதியாளர்களின் சங்கம் குறிப்பிட்டதைப் போன்று அண்ணளவாக 30% தொழிலாளர்கள் பணி நீக்கத்திற்கு உள்ளாகலாம்.

கோவிட்19 இடர் மூலம் நாட்டின் முழு சனத்தொகையும் தீவிர பொருளாதர, சமூக நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இந்நிலையில் இவ்வகையில் பெருமளவிலான மக்கள் வேலையற்றவர்களாகுவது தீவிர சமூகப் பேரழிவிற்கு இட்டுச்செல்லும். அதேபோலவே இந்நாட்டின் பொருளாதாரப் பெருஞ்சுமையை சுமந்து வந்த ஆடைத் தொழிற்துறை தொழிலாளர்களை கைவிடாமலிருப்பது என்ற மனித பண்பான பொறுப்பு தொழில் வழங்குனர்களுக்கும் அரசாங்கத்திற்கும் உள்ளது. அதனால் தொழிலாளர்களது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்கும் நோக்கோடு பின்வரும் முன்மொழிவுகளை முன்வைக்கின்றோம்.

இத்தொழிற்துறையினது தற்போதைய நிலைமை மற்றும் ஏற்றுமதி கம்பனிகளினது நிலைமை தொடர்பில் தொழிலாளர்களுடனும் தொழிற்சங்கங்களினுடனும் திறந்த, நேர்மையான கலந்துரையாடலை ஏற்படுத்துமாறு வேண்டுகின்றோம். கம்பனிகளிலுள்ள கணக்குகளின் நிலைமை (இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள கணக்குகள்) தொடர்பில் அறிந்து கொள்வதற்கான உரிமை தொழிலாளர்களுக்கு உள்ளது. கம்பனிகள் அத்தகைய தகவல்களை தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டும். கம்பனிகள் கடந்த சில வருட்ங்களாக ஜி.எஸ்.பி+ வரிச்சலுகையின் பிரதிபலனுடன் பெற்றுக்கொண்ட இலாபத்தின் உண்மையான அளவை வெளிப்படுத்த வேண்டும்.

பூகோள சந்தையிலும் உள்ளூர் கைத்தொழிலிலும் அண்மித்த காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கு மத்தியில் தொழில் வழங்குனர்கள், வாங்குனர்கள், தர அடையாளங்கள் மற்றும் அரசாங்கம் ஒன்றிணைந்து அடுத்த சில மாதங்களுக்கு தொழிலாளர்களுக்கான கொடுப்பனுவுகளை தொடர்ந்து வழங்குவதற்கான செயன்முறையொன்றை உருவாக்கவேண்டும். நிரந்தர, தற்காலிக, ஒப்பந்த அடிப்படை, வீட்டில் உற்பத்தி என அனைத்து வகையிலும் உற்பத்திப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும் அவ்வாறான கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும். தொழிலாளர்களது ஒப்பந்தங்கள் இந்தக் காலப்பகுதியில் நீடிக்கவேண்டும்.

சர்வதேச வாங்குனர்களும் தர அடையாளங்களும் தாம் ஏற்கனவே வழங்கிய கொள்முதல் ஆணையின் அடிப்படையில் கொள்முதல் செய்ய அவர்களை தூண்டுவதற்கான நடவடிக்கைகளை ஏற்றுமதி கம்பனிகளும் அரசாங்கமும் எடுக்க வேண்டும். இது தொடர்பில் ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்துள்ள அயல் வலய நாடுகளுடன் (கம்போடியா, வங்காளதேசம்) சர்வதேச உடன்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இச் சூழ்நிலையை பாவித்து தொழிலாளர்களை பணி நீக்கம் செய்வது தொடர்பான சட்டம் உள்ளிட்ட தொழிலாளர் உரிமைகளை உறுதி செய்யும் எந்தச் சட்டங்களையும் மாற்றம் செய்யும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படக் கூடாது. எந்த விதமான பணி நீக்கல் நடவடிக்கைகளும் தற்போதுள்ள சட்ட வரைமுறைகளுக்கு அமைவாகவே எடுக்கப்படவேண்டும். தற்போதைய வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யும் வகையில் தற்போதுள்ள காலத்திற்கு பொருத்தமற்ற இழப்பீட்டு கொடுப்பனவுகள் திருத்தப்படவேண்டும். தற்போதைய இடர் சூழ்நிலையை பாவித்து தொழிலாளர்களது உரிமைகளுக்கு பாதிப்பானவை என கடந்த வருடங்களாக தொழிலாளர் உரிமை இயக்கத்தினால் எதிர்க்கப்பட்டு வந்த ஒருமித்த தொழிற் சட்ட முறைமை உள்ளிட்ட தொழிற் சட்டத்திருத்தங்களை கொண்டுவர அரசாங்கம் முயலக்கூடாது.

புதிய உள்ளூர், ஏற்றுமதிச் சந்தைகளை கண்டடைய அரசாங்கம் உடனடியாக தலையிடவேண்டும். உதாரணமாக தற்போது முகக்கவசம் உள்ளிட்ட பாதுகாப்பு அங்கிகளுக்கு பாரியளவிலான கேள்வி எழுந்துள்ளது. அவ்வாறான கேள்வியை பூர்த்திசெய்வதற்கான முனைப்பை இலங்கை எடுக்கலாம்.

ஏற்கனவே மிகக்குறைந்தளவிலான சம்பளத்தை பெறுகின்ற தொழிலாளர்கள் கைத்தொழிற் துறையை மீட்க தமது சம்பளத்தை தியாகம் செய்யவேண்டுமென எதிர்பார்ப்பது அநியாமானதாகும். சம்பளக் குறைப்பிற்கான தேவை இருப்பின் மூத்த முகாமையாளர்கள், செயற்படுத்துநர்கள் ஆகியோரது சம்பளமே குறைக்கப்படவேண்டும்.

மிகக்குறைந்தளவிலான சம்பளத்தோடும் சலுகைகளோடும் கைத்தொழிற் துறையின் சுமையை சுமந்த தொழிலாளர்களை பாதுகாப்பது அரசாங்கத்தினதும் கைத்தொழிற் துறையினதும் பொறுப்பாகும். அரசாங்கமும் கைத்தொழிற் துறையும் அனைத்து சுமையையும் தொழிலாளர்கள் மீது சுமத்தி தப்பியோட மாட்டார்கள் நாங்கள் உண்மையாக நம்புகின்றோம்.

கையொப்பமிட்டோர்:

1. இலங்கை வர்த்தக, கைத்தொழில் மற்றும் பொதுத் தொழிலாளர்கள் சங்கம் (CMU)

2. ஆடைத் தொழிற் துறை தொழிலாளர்கள் சங்கம்
3. தபிந்து கூட்டிணைவு
4. ஸ்டாண்ட் அப் இயக்கம் லங்கா
5. ஸ்ரபிமானி கேந்திரய
6. மனித அபிவிருத்திக்கான மறுமதிப்பீட்டு இருப்பு (RED)
7. விடுதலை இயக்கம்

Supported by:
aaa

1. Alliance for Economic Democracy
2. Centre for Equality and Justice
3. Ceylon Bank Employee's Union
4. FORUM-ASIA
5. Human Elevation Organization (HEO)
6. INFORM Human Rights Documentation Centre
7. Institution for Social Development
8. Law and Society Trust
9. Mannar Women's Development Federation
10. Movement for Land and Agriculture Reforms
11. Movement for Plantation Peoples' Land Rights (MPPLR)
12. National Fisheries Solidarity Movement
13. People's Alliance for Right to Land
14. Progressive women's Collective
15. Savistri National Women's Movement
16. Social Institute for Development of Plantation Sector (SIDPS)
17. United Federation of Labour
18. Women's action for social justice
19. Women's Action Network
20. Working Women Front